www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

000121

சென்னை.

14.12.1986

**EPRLF ன் திட்டமிட்ட சதி முறியடிப்பு! புலிகள் மேற்கொண்ட ஆயுதப் பறிப்பு நடவடிக்கை!!**

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழ் மக்கள்மீது தொடர்ச்சியாகஅராஜகச் செயல் புரிந்து அம்மக்களுக்கு அநீதியையும் தாங்கொணாத் துன்பத்தையும் இழைத்து வந்ததாலும், எமது விடுதலை இயக்கத்தை ராணுவ ரீதியாக அழித்து இயக்கத்தின் முக்கியதளபதிகளைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியதாக ஆதாரபூர்வமான சான்றுகள் கிடைத்ததாலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எதிராக நாம் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதனால் உயிர்ச்சேதத்தைத் தவிர்த்து இந்த அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களை நிராயுதபாணிகளாக்கியுள்ளோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தளங்களிலுள்ள நூற்றுக்கணக்கான EPRLF உறுப்பினர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளனர்:

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்தில் புரிந்துவந்த அட்டூழியச் செயல்கள் காரணமாக இஸ்லாமியத் தமிழ்மக்கள் ஆத்திரமும் வேதனையும் கொண்டிருந்தனர். சிங்கள இனவாத அரசு தமிழ், முஸ்லிம் என்ற அடிப்படையில் தமிழ்மக்களைப் பிரித்து வேற்றுமை உணர்ச்சிக்கு வித்திட்டுவரும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் EPRLF அமைப்பைச் சேர்ந்தவர்களும் இஸ்லாமியத் தமிழர்களைத் துன்புறுத்திவந்த செயல்கள், மேலும் வேற்றுமைக்கு தூபமிடுவதாக அமைந்தது. அத்துடன் இந்த மக்கள்விரோத நடவடிக்கைகள் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஊறு விளைவிப்பதாக இருந்தது.

இது சம்பந்தமாக நாம் தொடர்ச்சியாக விடுத்துவந்த எச்சரிக்கைகளையும் EPRLF அமைப்பினர் உதாசீனம் செய்து வந்தனர். இந்த இஸ்லாமிய விரோத நடவடிக்கைகளுக்கு சிகரம் அமைத்தாற்போல, கடந்த 9ம் திகதியன்று திருகோணமலையில் சாம்பல் தீவுக்கும் நிலாவெளிக்கும் இடையிலுள்ள எட்டாம் கட்டை என்ற கிராமத்தில் இப்ரகீம் என்ற இஸ்லாமிய ஆசிரியரை EPRLF உறுப்பினர்கள் கடத்திச் சென்றனர். அவரை விடுதலை செய்யுமாறு அப்பகுதி இஸ்லாமியத் தமிழ் மக்கள் கடையடைப்புக்கள், ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியபோதும் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் இப்ரகீம் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவம் இஸ்லாமிய மக்களைக் கொதிப்படையச் செய்தது.

இது இவ்வாறிருக்க கடந்த 10ம் திகதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மக்கள் பெரும்பான்மையாக வாழும் பொத்துவில் எனுமிடத்தில் அவ்வூருக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லாரியொன்றை EPRLF உறுப்பினர்கள் கடத்திச் சென்றனர். இச் சம்பவம் இப்பகுதி இஸ்லாமிய மக்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியது. இவ்வாறு இவர்களது இந்த சமூக விரோத நடவடிக்கைகள் தமிழர், இஸ்லாமியர் என்ற வேற்றுமைக்கும், இனத்துவேசத்திற்கும் தூபமிடுவதாக அமைந்தது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்டவும் இயக்கத்தின் முக்கிய தளபதிகளைக் கொலை செய்யவும் EPRLF தலைமைப்பீடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சதித்திட்டம் தீட்டியது. இந்தப் பயங்கர சதித்திட்டம் சம்பந்தமாக ஆதாரபூர்வமான சான்றுகள் எம்மிடம் சிக்கியுள்ளன. விடுதலைப் புலிகளின் இராணுவ தளங்களையும், தகவல் தொடர்பு நிலையங்களையும் ஒரே சமயத்தில் தாக்கி, அத்தாக்குதலின்போது முக்கியமான தலைவர்களைச் சுட்டுக் கொல்வதென, இச் சதியில் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இதோடு அல்லாமல் அண்மைக்காலங்களில் EPRLF அமைப்பு எமதியக்கத்திற்கு எதிராக சில ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தது. அண்மையில் நெடுந்தீவு எனுமிடத்தில் எமது உறுப்பினர்கள்மீது EPRLF இராணுவப் பிரிவினர் கைக்குண்டுகளை வீசியும், நிலக்கண்ணிகளை வெடிக்கவைத்தும் தாக்குதல் மேற்கொண்டனர். நாம் சம்பவம் நடந்த இடத்தில்வைத்து அவர்கள்மீது எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் மனிதாபிமான முறையில் யாழ்நகரிலுள்ள அவர்களின் மேலிடத்திற்குச் சென்று இதுகுறித்து முறையிட்டோம். சமீபத்தில் மூதூரில் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களின் காட்டிக்கொடுப்பையடுத்து சிங்கள இராணுவத்தினர் நாம் வைத்திருந்த நிலக்கண்ணிவெடிகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இவை மாத்திரமன்றி ஆட்கடத்தல், கொலை, கொள்ளை என்ற ரீதியில் தொடர்ந்து தமிழீழமெங்கிலும் பரவலாக அராஜகச் செயல்கள் புரிந்து EPRLF அமைப்பினர் தமிழ்மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துள்ளனர். இஸ்லாமியத் தமிழர் உட்பட தமிழீழ மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்கவே எமது விடுதலை இயக்கம் இந்த அமைப்புமீது ஒழுங்கு நடவடிக்கையாக இவர்களை நிராயுத பாணிகளாக்க முடிவு எடுத்தது.

எஸ். சுப்பிரமணியம்
அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்

(இவ்வறிக்கை லண்டனில் பிரித்தானியக் கிளையினரால் மறுவிநியோகம் செய்யப்படுகிறது).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ மக்களுடன் ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கும் விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க EPRLF தீட்டிய சதித் திட்டத்தினை நிரூபிக்கும் கடிதம்

*************************

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் திடீர்த் தாக்குதல் மூலம் அழித்து ஒழிக்கத் திட்டம் தீட்டி, அத்திட்டம் வெளிப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில், EPRLF தலைவர் பத்மநாபா தாம் TELO வினருக்குத் தஞ்சம் அளித்ததால்தான் விடுதலைப் புலிகள் தம்மீது தாக்குதல் நடாத்தியிருப்பதாக, உண்மையை மறைத்து அறிக்கை விடுத்துள்ளார். EPRLF தலைமையகத்திலிருந்து (இந்தியாவிலிருந்து) அமீன் என்பவரால் EPRLF இராணுவப்பிரிவின் இரண்டாவது பொறுப்பாளர் ( முதலாவது பொறுப்பாளர் டக்ளஸ் சூளைமேடு சம்பவத்தில் கைதாகி சென்னை மத்திய சிறையில் இருக்கிறார். ) சுரேஸ் என்பவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் விடுதலைப் புலிகளை EPRLF தாக்கி அழிக்கத் தயாரித்த திட்டம் வெளிப்பட்டுள்ளது. சுரேஸ் தற்போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளார். அவரிடமிருந்து கைப் பற்றப்பட்ட கடிதத்தின் முழு விபரம்:

பிரச்சனைகளை தீர்ப்பதற்குரிய முயற்சிகளைச் செய்யவும். ஏற்படும் பிரச்சனைகளை அண்ணருக்கு (முகுந்தனுக்கு) அறியத்தரவும். முக்கியமாக LTTE பற்றிய RECEIVED REPLY அனுப்பவும்.

1. STOCK ல் உள்ள ஆயுதங்களைக் கணக்கெடுப்பதுடன், அவற்றைத் தயார் நிலைக்குக் கொண்டுவரவும். அவற்றை ஒரு இடத்தில் குவிக்காமல் கீழே சொல்லப்படும் குழுக்களிடம் காவிச் செல்லக்கூடிய வசதியுடன் பகிர்ந்தளிக்கவும்.

2. இருக்கும் ஆயுதங்களை இயக்கத் தேவையான அளவு தோழர்களின் மும்மடங்கை எடுத்து, அவற்றைத் தலைமை தாங்கக்கூடிய தோழர்களின் கட்டுப்பாட்டினுள் வைத்து, தாக்குதல் போன்றவற்றிற்கான பொதுவான COMANDING ESCORT முறைகளையும், சமிக்கைகளையும் செய்யச் சொல்லவும். இக்குழுக்களை மாற்றமின்றி தாக்குதலின்போதோ, பாதுகாப்பு நடவடிக்கைகளின்போதோ உபயோகித்தல் முக்கியமானது. இக்குழுக்களின் மூன்று பகுதிகளில் ஒரு பகுதி இயக்க நிலையிலும், ஒரு பகுதி இயக்கத் தயாரான நிலையிலும் மூன்றாவது பகுதி சிலமணிநேரத்தில் இயக்கத் தயாராகவுள்ள நிலைக்கு வரக்கூடிய நிலையிலும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவர்கள் தமது கடமைகளை கடுமையாகச் செய்யலாம்.

3. அவ்வப்பிரதேசங்களில் உள்ள LTTE இயக்கத்தின் தளத்தையும் அவர்கள் தாக்கக்கூடிய சாத்தியக்கூறுகளையும், ஆராய்ந்து இதற்கான பதில் நடவடிக்கைகளை நாம் எவ்வாறு செய்தல் வேண்டும் என்பதனை விசாரித்தல் வேண்டும். அல்லது செறிவான மோட்டார் தாக்குதல் அல்லது முக்கிய நபர்களைக் கொல்லுதல் என்பவற்றின்மூலம் இலகுவாக நிறைவேற்றலாம் என்பதனைத் திட்டமிடுக. ஆனால் இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் நேரத்துடனும் விரைவாகவும் வினைத்திறனுடனும் எப்படியாயினும் செய்து முடிக்கக் கூடியவர்களாகத் தெரிவு செய்க:

4. தேவையாயின் இக்குழுக்களை ஒன்றுசேர்த்து LTTE ன் ஏதாவது முக்கியமான இலக்கின்மீது ஒரு அதிரடித் தாக்குதல் மின்னல் வேகத்தில் முழுப்பலத்துடன் நடத்தக்கூடியவாறு ஒழுங்கு செய்யவும்.

5. பிரதானமாக LTTE ன் முகாம்களைத் தாக்கி, அவைகளனைத்தையும் தவிடுபொடியாக முற்றாகச் சிதைத்துவிடுமாறும் தயார்நிலையிலிருக்கவும்.

6. முக்கிய இடங்களில், தொடர்ச்சியான இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மறைவான இடங்களிலுள்ள O.P (அவதானிப்பு நிலையம்) யாக மாற்றி LTTE ன் தாக்குதல்களை (ஏற்படும் பட்சத்தில்) முன்னறியப்படுத்தவும். LTTE இனர் நடமாடுமிடங்களில் அவர்களது ஒவ்வொரு செயல்களையும் அவதானித்து தூதுவர் மூலமாகவும் அறிய ஏற்பாடு செய்யவும்.

7. காவல் அரண் அல்லது அவதானிப்பு நிலையத்தில் ஒருவராக நிற்பவரிடம் முக்கியமான ஆயுதங்களைக் கொடுக்காது, கைக்குண்டு இரண்டு மட்டும் பாதுகாப்பிற்காகக் கொடுக்க ஏற்பாடு செய்யவும்.

8. தோழர்களில் திறமையிருப்பினும் கட்டுப்பாடாகச் செயற்பட முடியாதவர்களைத் தெரிவுசெய்ய வேண்டாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உ)ரவுண்ட் ரவைகளைப் பாவிக்காமல் MINES ஐ(நிலக்கண்ணிகளை)பௌதீக முறையில் பாவித்தல்.

(1)இந்த முறையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்க.குறிப்பாக எதிரி புறப்படும் இடங்களிலேயே(முகாமைவிட்டு வெளியேறும்போது)கூட்டமாக அழித்து விடுவதற்கு பயன்படுத்துதல். நிலக்கண்ணியையும் மோட்டாரையும் அதிகமாக உபயோகிக்கவும்.

(2) குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலையான இலக்குகளைத் தாக்கவே மோட்டாரைப் பயன்படுத்தப் பழகியிருத்தல்.முன்னேறிவரும் ஒரு கூட்டத்தை அழிக்கும் முறையில் மோட்டாரைப் பயன்படுத்திச் சொல்லிக் கொடுக்கவும்.

ஊ)ஆயுதம் இல்லாத தோழர்களுக்கும் பிரதானமான வேலைகளைக் கொடுக்கவும்.பிரச்சாரம், கண்காணிப்பு,தொடர்பு மற்றும் அங்குள்ள தேவைக்ளுக்கும் இவர்களை ஆயுதமேந்திய தோழர்கட்கு பிரதியீடாய் மாற்றுவதற்கு தயார் நிலையிலும் வைத்திருக்கவும்.

எ)LTTE ன் தகவல் தொடர்பு சாதனங்கள்(COMMUNICATIONS )பற்றியும் அவை எங்கெங்கு உள்ளது என்பது பற்றியும் அறியத் தரவும்.அவற்றை முற்றாக அழித்து விடுவதற்குரிய தயார்நிலையிலும் வைத்திருக்கவும்.

(1).LTTE உடன் நாம் சமாதானத்தைப் பேசவே விரும்புகிறோம் என்பதனை மக்களுக்கு உணர்த்தவேண்டிய உடனடி நடவடிக்கைகளாகும்."

*************

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உ)ரவுண்ட் ரவைகளைப் பாவிக்காமல் MINES ஐ(நிலக்கண்ணிகளை)பௌதீக முறையில் பாவித்தல்.

(1)இந்த முறையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்க. குறிப்பாக எதிரி புறப்படும் இடங்களிலேயே(புகாமைவிட்டு வெளியேறும்போது)கூட்டமாக அழித்து விடுவதற்கு பயன்படுத்துதல். நிலக்கண்ணியையும் மோட்டாரையும் அதிகமாக உபயோகிக்கவும்.

(2) குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலையான இலக்குகளைத் தாக்கவே மோட்டாரைப் பயன்படுத்தப் பழகியிருத்தல். முன்னேறிவரும் ஒரு கூட்டத்தை அழிக்கும் முறையில் மோட்டாரைப் பயன்படுத்திச் சொல்லிக் கொடுக்கவும்.

ஊ)ஆயுதம் இல்லாத தோழர்களுக்கும் பிரதானமான வேலைகளைக் கொடுக்கவும். பிரச்சாரம், கண்காணிப்பு, தொடர்பு மற்றும் அங்குள்ள தேவைக்குக்கும் இவர்களை ஆயுதமேந்திய தோழர்கட்கு பிரதியீடாய் மாற்றுவதற்கு தயார் நிலையிலும் வைத்திருக்கவும்.

எ) LTTE ன் தகவல் தொடர்பு சாதனங்கள்(COMMUNICATIONS )பற்றியும் அவை எங்கெங்கு உள்ளது என்பது பற்றியும் அறியத் தரவும். அவற்றை முற்றாக அழித்து விடுவதற்குரிய தயார்நிலையிலும் வைத்திருக்கவும்.

(1). LTTE உடன் நாம் சமாதானத்தைப் பேணவே விரும்புகிறோம் என்பதனை மக்களுக்கு உணர்த்தவேண்டிய உடனடி நடவடிக்கைகளாகும்."

**************

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்